**செய்தி வெளியீடு எண் : 1399** **நாள் : 13.08.2022**

**செய்தி வெளியீடு**

**கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.30.77 கோடி மதிப்பீட்டிலான மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு, ரூ.8.35 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.12.30 கோடி மதிப்பீட்டிலான கொளத்தூர் ஏரியினை மறுசீரமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (13.8.2022) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 30.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், 2 கோடியே 71 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 5 கோடியே 63 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 12 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கொளத்தூர் ஏரியினை மறுசீரமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜமாலியா பகுதியில் சந்திரயோகி தெரு முதல் குக்ஸ் சாலை வரை 880 மீட்டர் நீளத்திற்கு 4.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்;

கொளத்தூர், திரு.வி.க நகர் மண்டலம், எஸ்.ஆர்.பி. கோயில் சாலையில் கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதி ஒருங்கிணைந்த மழை நீர் வடிகால் அமைக்கும் திட்டத்தின் கீழ், 3.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 260 மீட்டர் நீளத்திற்கு மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகள்;

கொளத்தூர், திரு.வி.க நகர் மண்டலம், பேப்பர் மில்ஸ் சாலை மற்றும் எவர்வின் பள்ளி எதிரில் கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதி ஒருங்கிணைந்த மழை நீர் வடிகால் அமைக்கும் திட்டத்தின் கீழ், 23.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகள்;

**என மொத்தம் 30.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, மழைக்காலத்திற்கு முன்பாக பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.**

பின்னர், கொளத்தூர் பள்ளி சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி சாலையில் 30.90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ரோகிணி சாலையில் 30.90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், எஸ்.ஆர்.பி. கோயில் தெருவில் 34.80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரைசாமி மடம் சாலையில் 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஜவஹர்லால் நேரு 3-வது சுற்றுச்சாலையில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புதிதாக கட்டப்படவுள்ள நகர்ப்புற நல வாழ்வு மையங்கள்;

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க.நகர் மண்டலம், பள்ளி சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 97.52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைக்கும் பணிகள்;

திரு.வி.நகர் மண்டலம், ஜி.கே.எம். சாலையில், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 24.78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 40 சதுர மீட்டர் பரப்பளவில் புதிதாக அமைக்கப்படவுள்ள நீத்தார் வழிபாட்டுக் கூடம் (காரியக் கூடம்);

**என மொத்தம் 2 கோடியே 71 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

திரு.வி.க.நகர் மண்டலம், சீனிவாசா நகரில் அமைந்துள்ள சென்னை ஆரம்பப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் மூலதன நிதியின் கீழ் 60.32 இலட்சம் ரூபாய் செலவில் 1260 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள டென்னிஸ் மைதானம்;

பெரியார் நகரில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு புறநகர் மருத்துவமனையில், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் அறுவை சிகிச்சை, மகப்பேறு மற்றும் மகளிர் நோய்க்கான அறுவை சிகிச்சை, காது, மூக்கு மற்றும் தொண்டை நோய் அறுவை சிகிச்சை, கண் அறுவை சிகிச்சை ஆகிய அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளும் வகையில் 2.75 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள நான்கு அறுவை அரங்கங்கள், 1.28 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பிராணவாயு

உற்பத்திக்கலன் மற்றும் 1 கோடி ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள RTPCR ஆய்வகம்;

**என மொத்தம் 5 கோடியே 63 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

நீர்வளத்துறையின் சார்பில், கொளத்தூர் ஏரியின் நீர் சேமிப்பை அதிகரித்திட 510 மீட்டரில் கரைகளை பலப்படுத்துதல், 120 மீட்டரில் சுற்றுச்சுவர் அமைத்தல், 170 மீட்டரில் புதிய கால்வாய் அமைத்தல் மற்றும் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் 400 மீட்டரில் நடைப்பாதை அமைத்தல் ஆகியவற்றிற்காக 7 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொளத்தூர் ஏரியினை ஆழப்படுத்தி, கரைகளை மறுசீரமைத்தல் மற்றும் உபரிநீர் கால்வாயினை மேம்படுத்தும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நெடுஞ்சாலைத் துறை சார்பில் சென்னையின் தேசிய நெடுஞ்சாலைகளையும், மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளையும் இணைக்கும் உள்வட்டச் சாலையில் கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட செல்வி நகர், மகாத்மா காந்தி நகர், மகாவீர் நகர் மற்றும் கண்ணகி நகர் ஆகிய தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் செல்வதை தவிர்க்கும் பொருட்டு 240 மீட்டர் நீளத்திற்கு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

முன்னதாக, கொளத்தூர், தொன்போஸ்கோ மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜி.கே.எம். காலனி அரசு மேல்நிலைப்பள்ளி, பெரம்பூர் - மார்க்கெட் தெரு சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பெரம்பூர் - பந்தர் கார்டன் சென்னை மேல்நிலைப்பள்ளி, கொளத்தூர் - சென்னை மேல்நிலைப்பள்ளி, கொளத்தூர் - டான் பாஸ்கோ மேல்நிலைப்பள்ளி, பெரம்பூர் - பேப்பர் மில்ஸ் சாலை தி லூர்துஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலை சம்பலால் பஹாரியா ஜெயின் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளைச் சார்ந்த 927 மாணவர்கள் மற்றும் 619 மாணவியர்கள், என மொத்தம் 1546 மாணவ, மாணவியர்களுக்கு 78 இலட்சத்து 30 ஆயிரத்து 909 ரூபாய் மதிப்பிலான இலவச மிதிவண்டிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 225 முதலாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் 209 இரண்டாம் ஆண்டு மாணவர்கள், என மொத்தம் 434 மாணவர்களுக்கு கல்வி

கட்டணத் தொகையாக தலா 10,000/- ரூபாயினை ரொக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். மேலும், 225 முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு ஸ்டைன்லெஸ் ஸ்டீல் வாட்டர் பாட்டில், பேனா, நோட்டுப் புத்தகம் ஆகியவற்றுடன் கூடிய புத்தகப்பைகளையும் வழங்கினார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளி சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கி, ஆசிரியர்களுக்கு சிறப்பு செய்தார்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. கலாநிதி வீராசாமி, திரு. ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி, துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி. செந்தில்குமார், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in